[1978 மார்ச் 3

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மூடப்பட்ட மில்கள் அல்லது ஸ்டுடியோக்கள் போன்ற எந்த நிறுவனமாக இருந்தாலும், தொழிலாளர்களாகவே அதை எடுத்து நடத்துவதற்கு முன் வந்தால், அரசாங்கம் அதற்கு அசிஸ்ட் பண்ணும், உதவி செய்யும், ஊக்குவிக்கும் என்று நம்முடைய கனம் முதலமைச்சரவர்கள் நல்ல ஒரு யோசனையை முன்னால் சொல்லியிருந்தார். இந்தக் குறிப்பிட்ட இரண்டு ஸ்டுடியோக்களுடைய தொழிலாளர்கள் அந்த ஸ்டுடியோக்களை எடுத்து நடத்துவதற்கே முன் வந்திருக்கிறார்கள். அதனுடைய நிர்வாகிகளும் அவர்களிடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அன்றைக்கு முதல் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியின்படி, தொழிலாளர்கள் அதை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய அசிஸ்டன்ஸ் கொடுப்பதற்குத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நிர்வாகிகளும் தொழிலாளர்களும் ஒருங்கிணைந்து நியாயமான முறையில் எப்படி இந்தப் படப்பிடிப்பு நிலையத்தை நடத்த முடியுமோ, அதற்கேற்ற திட்டங்களோடு அரசை அணுகினால் அரசு பரிசீலிக்கும்.

திரு ரா. உமாநாத் : தலைவரவர்களே, அவர்களுக்கு சம்பள பாக்கிகளும் பல பாக்கிகளும் இருப்பதனாலே, அன்எம்ப்ளாய்மென்ட் இருக்கும்போது அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கனம் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் தலையிட்டு அந்தப் பாக்கிகளைக் கொடுப்பதற்கு ஏதாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, கேள்வி அந்தப் படப்பிடிப்பு நிலையத்தைத் திறப்பதற்குத் தொழிலாளர்கள் பொறுப்பேற்று அதை நடத்துவதற்கு முன்வந்திருக்கிறார்கள் ; இந்த அரசு உதவி செய்யுமா என்பது. அதற்கேற்ப நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று சொன்னபொழுது பழைய பாக்கியைக் கொடுக்க முடியுமா என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வி பொருத்தமா என்பதை பேரவைத் தலைவரவர்களே முடிவு செய்து கொள்வதோடு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன், அந்தப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சனை என்பது இங்குள்ள அனைவருக்கும் தெரியும், அவருக்கும் தெரியும்.

கொத்தடிமை முறை

* 374 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

இம்மாநிலத்தில் கொத்தடிமை முறை பூரணமாக ஒழிக்கப்பட்டு விட்டதா ?

1978 மார்ச் 3]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழகத்தில் கொத்தடிமை முறை பூரணமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. தமிழகத்தில் ஒன்பது மாவட்டங்களில் கொத்தடிமை முறை காணப்பட்டது. 2,271 குடும்பங்களைச் சார்ந்த 2,883 கொத்தடிமைகளை அரசு விடுவித்தது. இது தவிர கல்ராயன் மலைப் பகுதியில் 24,945 பேர்கள் இம்முறையினின்றுப் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளை அரசு செய்து வருகிறது.

* 375 வினு—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னுற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுகா, கல்வராயன் மலை வாழ்மக்கள் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) கல்வராயன் மலைவாழ் மக்கள் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டு விட்டார்கள்.

(ஆ) கல்வராயன் மலைப்பகுதியில் 5,828 குடும்பங்களைச் சார்ந்த 24,945 கொத்தடிமைகள் கண்டுபிடிக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டார்கள்; அம்முறையும் அகற்றப்பட்டுள்ளது.

கல்வராயன் மலைப்பகுதியில் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு அவர்களுக்கு விவசாயத்திற்கு நிலங்களும், வீடுகட்ட வீட்டுமனைகளும் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்காக 18 குழந்தைகள் காப்பகங்களும், மூன்று குடியிருப்புப் பள்ளியும் துவக்கப்பட உள்ளன. புதுப்பாலப்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகமும், சுகாதாரப் பணிகளுக்காக 4 மருத்துவக் குழுக்களும் பணியாற்றுகின்றன. 3 கூட்டுறவு வங்கிகள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் செய்யப்படுகின்றது. வேளாண்மைப் பணிகளுக்கு விவசாயக் கடனும் கொடுக்கப்படுகிறது. ரூ. 57·3 இலட்சம் செலவில் சாலைப்போக்குவரத்து வசதிகள் செய்யப்படுகின்றது.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொத்தடிமைகளின் புனர்வாழ்வு பற்றிக் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் அவர்கள் பயிரிட்டுக் கொண்டிருந்த உழக்காடு, புனல்காடு போன்ற பகுதிகளை எல்லாம் வனத்துறை இலாகாவினர் செக்ஷன் 66-ன் கீழ் எடுத்துக் கொள்வோம் என்று சொல்லியிருக்கிருர்கள். அந்த விவசாயிகளுக்கு அந்த